என்று நான் தெரிவித்தேன். எனவே ஒவ்வொரு மருத்துவமனையையும் —ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் நாம் தரம் உயர்த்திக் கொண்டே வருவது என்பது முடியாத காரியம். அதன் காரணத்தால்தான் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு தாலுக்கா மருத்துவமனை என்ற வகையிலே நாம் வரையறை வைத்திருக்கிறோம். மிகப் பெரிய ஆய்வுக்குப் பின்னாலேதான் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தால் அதைப்பற்றி ஆய்வு செய்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 405, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

405—

சென்னைப் பெருநகர் அபிவிருத்திக்காக மத்திய அரசின் நிதி உதவி.

20624—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் அபிவிருத்திக்காக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்விற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 24 லட்சங்களை மத்திய அரசிடமிருந்து அதனுடைய பங்குத் தொகையாகக் கீழ்க்கண்டவாறு பெற்றிருக்கிறது.

1988-89	..	5 லட்சம்
1989-90	..	5 லட்சம்
1990-91	..	14 லட்சம்

1994 ஏப்ரல் 27]

முதலாம் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்திற்கு உலக வங்கியின் கடன் தொகை சுமார் ரூபாய் 21.6 கோடி. அதில் 70 சதவீதத்தைத் தமிழக அரசிற்கு மத்திய அரசு கொடுத்துள்ளது. இரண்டாவது சென்னை நகர வளர்ச்சித் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதி உதவி ரூபாய் 45.05 கோடி. இதில் 70 சதவீதம் தமிழக அரசிற்கு மத்திய அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டத்தில் சென்னை நகர வளர்ச்சிக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மீளப்பெறும் கேட்புகளின் அடிப்படையில் மத்திய அரசிற்கு உலக வங்கி வழங்கி வரும் கடன் தொகையில் 100 சதவீதம் ரூபாய் மதிப்பை மத்திய அரசு, தமிழக அரசிற்கு வழங்கி வருகிறது. இது தவிர மாபெரும் நகர்த் திட்டம் என்கிற திட்டத்தில் மத்திய உதவியுடன் கூடிய மாபெரும் நகர்த் திட்டத்தின் கீழ் மேம்படுத்த தேர்வு செய்யப்பட்ட ஆறு நகரங்களுள் சென்னை நகரையும் ஒன்றாக நகர்ப்புற மயமாக்கும் தேசிய ஆணையம் தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு நலப் பணித் திட்டங்களை ரூபாய் 857 கோடி செலவிலே நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. அதற்காக மாபெரும் நகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு புதிய அமைப்பினை 60 கோடி மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசுகளினுடைய நிதியுதவியுடன் உருவாக்கி இத்திட்டங்களை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

முற்பகல் 10-25

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டிவரும் ஒப்பற்ற திட்டமாக ‘எழில்மிகு சென்னை 2000’ என்ற திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தத் திட்டத்திற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ், ஏதேனும் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘எழில்மிகு சென்னை 2000’ என்ற திட்டத்திற்கு, நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் நிறைவேற்றப்படுகிற திட்டங்களுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை நிதியுதவி செய்து வருகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மெட்ராஸ் சிட்டி புரோக்ராம்’ என்ற திட்டத்திற்கு, இவ்வாண்டு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பாக ஏதேனும் நிதியுதவி செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில், ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மெட்ராஸ் சிட்டி புரோக்ராம்' என்ற மாபெரும் நகரத் திட்டத்திற்கு, 1994-95 இல், 437 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை அமலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில், 124 கோடி ரூபாய், இந்த ஆண்டிலேயே செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று மத்திய அரசும், உலக வங்கியும், சென்னை நகரத்தை அழகுபடுத்துவதற்காக நிதியுதவி அளித்திருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். நாம் எவ்வளவுதான் இதில் அபிவிருத்தி செய்தாலும்கூட, இங்கே கூவத்தைச் சுற்றி குடிசைகள் பல இடங்களிலே இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறபோது, சென்னையினுடைய அழகை இது கெடுக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் குடிசைகளையெல்லாம் எடுத்துவிட்டு, அவர்களுக்கு மாற்று இடத்தில், நகரத்திற்கு அப்பால், நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய இடத்திலே எங்கேயாவது வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களையெல்லாம் குடியமர்த்தி, உண்மையிலேயே நம்முடைய இந்தியத் திருநாட்டிலேயே ஒரு அழகிய நகரமாக சென்னையை மாற்றுகிற திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா? அப்படியிருக்குமேயானால், அது எப்போது செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளைத்தான் இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் சிறப்பாகச் செய்து வருகிறது. இருந்தாலும் சென்னை நகரைச் சுற்றியிருக்கிற ஏராளமான குடிசைகளுக்கு, அவற்றில் உள்ளவர்களுக்கு உரிய இடங்களைக் கொடுப்பதற்கு, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அதற்கான இடங்கள் கிடைத்தவுடன், நிதியாதாரங்களைக் கருத்திற் கொண்டு, அவர்களை சென்னை நகரின் புறநகர்ப் பகுதிகளில் குடியமர்த்துவதற்கான திட்டங்கள் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.